EVERWIN VIDHYASHRAM

STD: VII TAMIL - L2 TERM - I

இயல் - 1

கவிதைப் பேழை : 1. எங்கள் தமிழ்

: 2. ஒன்றல்ல இரண்டல்ல

உரைநடை உலகம் : பேச்சு மொழியும் எழுத்துமொழியும்

## கவிதைப் பேழை - எங்கள் தமிழ்

### I. பொருள் தருக:

1. அருள் நெறி - அன்பு வழி
2. அச்சம் - பயம்
3. தேன்மொழி - அமுதமொழி
4. கொள்கை - குறிக்கோள்
5. அறம் - நல்ல செயல்
6. விரதம் - நோன்பு

### II. குறுவினாக்கள்:

1. தமிழ் மொழியின் பண்புகளாக நாமக்கல்கவிஞர் கூறுவன யாவை?

நம தமிழ்மொழி அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகின்றது.

அனைவரிடமும் அன்மைபயும், அறத்தையும் தூண்டி அச்சத்தைப் போக்கி இன்பத்தைத் தருகின்றனது.

2. தமிழ்மொழியைக் கற்றலரின் இயல்புகளை எழுதுக.

தமிழ் மொழியைக் கற்றோர் பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.

தம்மை போற்றதாவர்களையும் இகழந்து பேசமாட்டார்.

3. தமிழ்மொழி எவற்றை ஊக்கிவிடும? எதைப் போக்கி விடும்?

தமிழ்மொழி அன்பையும்? அறத்தையும் ஊக்கப்படுத்தும்.

அச்சம் என்பதை போக்கிவிடும்.

4. தமிழனின் குரல் யாது?

அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருவதே தமிழ் மக்களின் குரலாகும்.

## 2. ஒன்றல்ல இரண்டல்ல

### I. பொருள் தருக:

1. தென்றல் - குளிர்ந்தகாற்று
2. முகில் - மேகம்
3. வேள் - உதவி
4. வள்ளல் - உவகாரி

### II. பிரித்து எழுதுக:

1. கலம்பகம் - கலம் பகம்
2. நன் செய் - நன்மை செய்
3. சங்க இலக்கியம் - சங்கம் இலக்கியம்
4. ஒன்றல்ல - ஒன்று அல்ல

### III. குறுவினாக்கள்:

1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

தென்றலில் தேன் மணம் கமழ்ந்து வீசும் இயற்கைய வளங்கள் உடையது.

இங்கு சுவை மிகுந்த கனிகளும்? தானியக் கதிர்களும் விளைகின்ற நன்செய் நிலவளங்களும் உடையன.

2. ‘ஒன்றல்ல இரண்டல்ல’ - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.

முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தைவிடப் புகழ்பெற்றான் வள்ளல் பாரி.

புலவரின் சொல்லுக்காக தன் தலையையே தரத் துணிந்தான் வள்ளல் குமணன்.

3. கடையெடு வள்ளல்கள் யாவர்?

பாரி ஓரி காரி அதியன் பேகன் நள்ளி ஆய் என கடையெழு வள்ளல்கள் எழுவர் ஆவர்.

4. ‘பரணி இலக்கிய’ என்றால் என்ன?

பரணி என்பது தொண்ணூற்றாறு சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும்.

போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி பெறும் வீரர்களைப் பற்றி பாடுவதாகும்.

## உரைநடை உலகம் - பேச்சுமொழியம், எழுத்துமொழியும்

### I. குறுவினாக்கள்:

1. மொழியின் இருபடிவங்கள் யாவை?

மொழியின் இருவடிவங்கள்: 1. பேச்சுமொழி 2. எழுத்துமொழி

2. பேச்சு மொழி என்றால் என்ன?

வாயினால் பேசப்படும், பிறரால் கேட்டு, உரைப்படுவது பேச்சு மொழியாகும்.

பேச்சுமொழி உணர்வுகளையும், கருத்துகளையும் பிறருக்கு எளிதாக உணர்த்தும்.

மொழியின் உயிர் நாடியாகவும் விளங்குகின்றது.

3. வட்டார மொழி எனப்படுவது யாது?

தமிழ்மொழி பேச்சுவழக்கில் இடம் சார்ந்து, சமூகம் சார்ந்து. தொழில்சார்ந்து அந்தந்த மாநிலத்திற்கேற்ப வழங்கப்படுவது வட்டார மொழியாகும்.

### II. பிரித்து எழுதுக:

1. வானொலி - வான் + ஒலி
2. பொருளின்றி - பொருள் + இன்றி
3. செழுந்தமிழாய் - செழுமை + தமிழாய்

### III. சேர்த்து எழுதுக:

1. தமிழில் + இருந்து - தமிழிலிருந்து
2. நாள் + ஏடுகள் - நாளேடுகள்

## இயல் - 2

கவிதைப் பேழை : 1. காடு
: 2. அப்படியே நிற்கட்டும அந்தமரம்
உரைநடை உலகம் : விலங்குகள் உலகம்

## கவிதைப் பேழை - 1. காடு

### I. பொருள் தருக:

1. ஈன்று - பெற்று
2. கொம்பு - கிளை
3. அதிமதுரம் - மிகுந்த சுவை
4. களித்திட - மகிழந்திட
5. நச்சரவம் - விடமுள்ள பாம்ப

### II. பிரித்து எழுதுக:

1. மரக்கிளை - மரம் + கிளை
2. கூடியிருக்கும் - கூடி + இருக்கும்
3. பூத்திருக்கும் - பூத்து + இருக்கும்
4. தீபமென - தீபம் + என
5. காடெல்லாம் - காடு + எல்லாம்

### III. சேர்த்து எழுதுக:

1. நடனம் + ஆடும் - நடனமாடும்
2. விலங்கு + இனங்கள் - விலங்கனஙகள்
3. கனி + பறிக்கும் - கனிபறிக்கும்
4. தடை + இருக்கும் - தடையிருக்கும்
5. தங்கும் + இடங்கள் - தங்குமிடங்கள்

### IV. குறுவினாக்கள்:

1. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?

காட்டுப்பூக்களுக்கு கார்த்திகை விளக்குகளை கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.

2. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?

காடு பல வகையான பொரள்களைத் தரும்.
காய்கனிகளையும் தரும்.
எல்லோரும் கூடி மகிழ்ந்திடக் குளிர்ந்த நிழல் தரும்.
இவையே காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.

3. காட்டைக் குறிக்கும் வேறு பெயர்கள் ஐந்தினை எழுதுக.

காட்டைக் குறிக்கும் வேறு பெயர்கள்:
1. கானகம் 2. வனம் 3. அடவி 4. பொழில் 5. கான்

4. சுரதாவின் இயற்பெயர் என்ன?

சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன் என்பதாகும்.

## 2. அப்படியே நிற்கட்டும்அந்தமரம்

### I. பொருள் தருக:

1. பரவசம் - மகிழ்ச்சிப்பெருக்கு
2. துஷ்ட கேட்டல் - துக்கம விசாரித்தல்
3. அகவை - வயது
4. மனம் - உள்ளம்
5. சுவாரசியம் - ஆர்வத்தைத் தூண்டுதல்

### II. பிரித்து எழுதுக:

1. படையெடுத்து - படை + எடுத்து
2. கேட்டிருக்கிறேன் - கேட்டு + இருக்கிறேன்
3. நிலவொளியியல் - நிலவு + ஒளியில்
4. பரவிக்கிடக்கும் - பரவி + கிடக்கும்
5. ஊர்மக்கள் - ஊர் + மக்கள்

### III. சேர்த்து எழுதுக:

1. அலை + மோதும் - அலைமோதும்
2. மா + மலை - மாமலை
3. மனம் + இல்லை - மனமில்லை
4. நாவல் + பழங்கள் - நாவற்பழங்கள்
5. பச்சை + காய்கள் - பச்சைக்காய்கள்

### IV. குறுவினாக்கள்:

1. நாவல்மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?

நாவல்மரம் முன்னொர்களாகிய தாத்தவுக்கும் தாத்தா காலத்திலே இருந்து அங்கு நின்றிருந்தது.

2. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?

காக்கை, குருவி, மைனா, கிளிகள், அணில்கள் ஆகியவை நாவற்பழம் கிடைக்க உதவியோர் ஆவர்.

3. உங்கள் பகுதிகளில் உள்ள மரங்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

வேப்பமரம் மாமரம் முருங்கைமரம் வாழைமரம்

4. பன்முகத் திறன்களைப் பெற்றவர் யார்?

பன்முகத் திறன்களைப் பெற்றவர் செய்யுளின் ஆசிரியர் ராஜமார்த்தாண்டன் என்பவர்கள்.

5. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது எது?

நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது கருநீலக் கோலிக்குண்டுகள் ஆகும்.

## உரைநடை - விலங்குகள் உலகம்

### I. பிரித்தெழுதுக:

1. வனக்கல்லூரி - வனம் + கல்லூரி
2. புகைப்படம் - புகை + படம்
3. புள்ளிமான் - புள்ளி + மான்
4. அனைத்துண்ணி - அனைத்து + உண்ணி

### II. சேர்த்தெழுதுக:

1. காடு + ஆறு - காட்டாறு
2. வேட்டை + ஆடிய - வேட்டையாடிய
3. பல்கலை + கழகம் - பல்கலைக்கழகம்
4. நினைவு + ஆற்றல் - நினைவாற்றல்

### III. குறுவினாக்கள்:

1. காடு பற்றி குறிப்பு எழுதுக?

முனித முயற்சியின்றி வளர்ந்த மரங்கள், செடிகள், கொடிகள், புல், புதர்கள், பூச்சினங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடம்தான் காடாகும்.

2. கரடி அனைத்துண்ணி என அழைக்கப்படுவது ஏன்?

கரடி ஓர் அனைத்துண்ணி ஏனென்றால் பழங்கள், தேன், உதிர்ந்தமரல்கள், காய்கள், கனிகள், புற்றீசல் ஆகிய அனைத்துவகை உயிரிகளையும் உண்பதால் இது அனைத்துண்ணி என அழைக்கப்படுகிறது.

3. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக?

மானின் வகைகளான புள்ளிமான்கள், சருகுமான், மிளாமான், வெளிமான் என பலவகையான மான்கள் உள்ளன.

4. முண்டந்துறை குறிப்பு வரைக.

முண்டந்துறை என்பது தமிழ்நாட்டில் இரண்டாவது மிகப்பெரிய காப்பகமாகும்.

இது 895 கிலோமீட்டர் பரப்பளவு கொண்டது.

இங்கு யானை, புலி, சிறுத்தை, மான், கரடி, காட்டுமாடு போன்ற அரிய விலங்குகள் வாழ்கின்றன.

5. விலங்குகளின் தொடர்பான பழமொழிகள் இரண்டினை எழுதுக?

எ.கா. 1. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

2. யானைக்கு ஒரு காலம், பூனைக்கு ஒரு காலம்.

## இயல் - 3

| | |
|---|---|
| கவிதைப் பேழை | : 1. புலி தங்கிய குகை |
| | : 2. பாஞ்சைவளம் |
| உரைநடை உலகம் | : தேசியம் காத்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் |

## கவிதைப் பேழை - புலி தங்கிய குகை

### I. பொருள் தருக:

1. சிற்றில் - சிறுவீடு
2. யாண்டு - எங்கே
3. கல் அளை - கற்குகை
4. ஈன்றவயிறு - பெற்றெடுத்த வயிறு

### II. பிரித்து எழுதுக:

1. போாக்களம் - போர் + களம்
2. சிற்றில் - சிறுமை + இல்
3. கருப்பொருள் - கரு + பொருள்
4. எட்டுத்தொகை - எட்டு + தொகை
5. வீரத்தாய் - வீரம் + தாய்

### III. சேர்த்து எழுதுக:

1. கல் + அளை - கல்லளை
2. சிறுமை + குடில் - சிறுகுடில்
3. செவிலி + தாய் - செவிலித்தாய்
4. புறம் + நான்கு +ஆறு - புறநானூறு

**IV. குறுவினாக்கள்:**

1. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?

தம் வயிற்றுக்குத் தாய் புலி தங்கிய குகையை உவமையாகக் கூறுகிறார்.

2. காவற்பெண்டு - குறிப்பு வரைக.

* சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவர்.
* கோப்பெரு நற்கிள்ளியின் வெவிலித்தாய் விளங்கியவர்.
* கல்வியில் தேர்ச்சியம், கவிபாடும் ஆற்றலும் மிக்கவர்.

3. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்கள் நான்கினை எழுதுக.

சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்கள்

* ஔவையார் * ஆதிமந்தி * பேயனார் * பொன்முடியார்

## 2. பாஞ்சை வளம்

**I. பொருள் தருக:**

| | | |
|---|---|---|
| 1. சூரன் | - | வீரன் |
| 2. பொக்கிஷம் | - | செல்வம் |
| 3. சாஸ்தி | - | மிகுதி |
| 4. விஸ்தாரம் | - | பெரும்பரப்பு |
| 5. வாரணம் | - | யானை |
| 6. பரி | - | குதிரை |
| 7. சிங்காரம் | - | அழகு |
| 8. கழுகு | - | பாக்கு |

**II. பிரித்து எழுதுக:**

| | | |
|---|---|---|
| 1. வீட்டிலுயர் | - | வீட்டில் + உயர் |
| 2. மதிலோடை | - | மதில் + ஓடை |
| 3. நாட்டரசன் | - | நாடு + அரசன் |
| 4. செந்நெல் | - | செம்மை + நெல் |
| 5. வாக்கருள் | - | வாக்கு + அருள் |

**III. எதிர்ச்சொல்:**

| | | |
|---|---|---|
| 1. புதுமை | X | பழைமை |
| 2. அழகு | X | அவலட்சணம் |
| 3. வலம் | X | இடம் |
| 4. வலிமை | X | வலிமையற்ற |
| 5. அன்பு | X | பகை |

**IV. குறுவினாக்கள்:**

1. பாஞ்சாலக் குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக?

பாஞ்சாலக் குறிச்சியில் பல சுற்றுகளாக கோட்டைகள் இருக்கும். அவை மதில்களால் சூழப்பட்டவையாக மிகவும் வலிமையாகக் கட்டப்பட்டிருக்கும்.

2. பாஞ்சாலக் குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?

மயில்கள் நாட்டின் வளத்தைக் கூறி விளையாடும்.

முயலானது தன்னைப் பிடிக்க வரும் வேட்டை நாயை எதிர்த்து விரட்டி விடும்.

பசுவும், புலியும் நீர்நிலையின் ஒரே துறையில் நின்று தண்ணீரைக் குடிக்கும்.

3. பாஞ்சாலக் குறிச்சிக்கு அழகு சேர்ப்பது எது?

பூஞ்சோலைகளும், சந்தனமரச் சோலைகம் பாக்குத்தோப்புகளும் பாஞ்சாலக்குறிச்சிக்கு அழகு சேர்க்கும்.

4. பாஞ்சாலக் குறிச்சியின் அரண்மனையை பற்றி எழுதுக?

பாஞ்சாலக் குறிச்சியின் அரண்மனை வாசல் முறைப்படி அழகுப்படுத்தப்பட்டு இருக்கும். அழகு மிகுந்த அரசனாகிய கட்டபொம்மன் அரசவையில் வீற்றிருப்பான்.

## உரைநடை உலம் - தேசியம் காந்த செம்மல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்

**I. பிரித்தெழுதுக:**

| | | |
|---|---|---|
| 1. சமுதாயப்பணி | - | சமுதாயம் + பணி |
| 2. பேச்சாற்றல் | - | பேச்சு +ஆற்றல் |
| 3. குற்றப்பரம்பரை | - | குற்றம் + பரம்பரை |
| 4. பொதுத்தொண்டு | - | பொது + தொண்டு |

**II. குறுவினாக்கள்:**

1. முத்துராமலிங்கத்தேவர் எங்கு எப்போது பிறந்தார்?

முத்துராமலிங்த்தேவர் கி. பி. 1908-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முப்பதாம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் பிறந்தார்.

2. முத்துராமலங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக?

சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிச்சுடுதல், சோதிடம். மருத்ததுவம், போன்ற பலதுறைகளிலும் ஆற்றல் உடையவராக முத்துராமலிங்கத்தேவர் விளங்கினார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சொற்பொழி ஆற்றும் திறன் பெற்றிருந்தார்.

3. வாய்ப்பூட்டுச் சட்டம் யார்யாருக்கு விதிக்கப்பட்டது?

வாய்ப்பூட்டுச் சட்டம் வட இந்தியாவில் பாலகாங்கதரதிலகருக்கும். தென்னிந்தியாவில் முத்துராமலிங்கத் தேவருக்கும் விதிக்கப்பட்டது.

4. குற்றப்பரம்பறை சட்டம் என்றால் என்ன?

ஆங்கில ஆட்சியில் மக்களை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டது குற்றப்பரம்பரை சட்டமாகும்.

5. முத்துராமலிங்கத் தேவரின் சிறப்புப் பெயர்கள் எவை?

முத்துராமலிங்கத் தேவரின் சிறப்புப் பெயர்கள் தேசியம் காத்த செம்மல், வித்யாபாஸ்கர, பிரவசன கேசா், சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்தசமயமேதை ஆகியனவாகும்.

## இயல் - 4

கவிதைப் பேழை : 1. கலங்கரை விளக்கம்

: 2. கவின்மிகு கப்பல்

உரைநடை உலகம் : தமிழரின் கப்பற்கலை

### கவிதைப் பேழை - 1. கலங்கரை விளக்கம்

**I. பொருள் தருக:**

| | | |
|---|---|---|
| 1. மதலை | - | தூண் |
| 2. ஞெகிழி | - | தீச்சுடர் |
| 3. அழுவம் | - | கடல் |
| 4. சென்னி | - | உச்சி |
| 5. உரவுநீர் | - | பெருநீர்ப்பரப்பு |
| 6. கரையும் | - | அழைக்கும் |

**II. குறுவினாக்கள்:**

1. மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?

கலஙகரை விளக்கத்தில் இரவில் ஏற்பட்ட எரியும் விளக்கு, கடலில் துறை அறியாமல் கலங்கும் மரக்கலங்களை தன்துறை நோக்கி அழைக்கிறது.

2. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

கலங்கரை விளக்கில் இரவுநேரத்தில் விளக்கு ஏற்றப்படும்.

3. பத்துப்பாட்டு நூல்கள் யாவை?

| | |
|---|---|
| 1. திருமுருகாற்றுப்படை | 2. பொருநராற்றுப்படை |
| 3. பெரும் பாணாற்றுப்படை | 4. சிறுபாணாற்றுப்படை |
| 5. முலலைப்பாட்டு | 6. மதுரைக்காஞ்சி |
| 7. நெடுநல்வாடை | 8. குறிஞ்சிப்பாட்டு |
| 9. பட்டினப்பாலை | 10. மலைபடுகடாம் |

### கவிதைப் பேழை - கவின் மிகு கப்பல்

**I. பொருள் தருக:**

| | | |
|---|---|---|
| 1. உரு | - | அழகு |
| 2. நீகான் | - | நாவாய் ஓட்டுவான் |
| 3. வங்கூழ் | - | காற்று |
| 4. வங்கம் | - | கப்பல் |
| 5. கோடுஉயர் | - | கரைஉயர்ந்த |

**II. பிரித்து எழுதுக:**

| | | |
|---|---|---|
| 1. காட்சியளிப்பவை | - | காட்சி + அளிப்பவை |
| 2. கப்பலோட்டியவர் | - | கப்பல் + ஓட்டியவர் |
| 3. அகநானூறு | - | அகம் + நான்கு + நூறு |
| 4. மருதத்திணை | - | மருதம் + திணை |
| 5. எட்டுத்தொகை | - | எட்டு + தொகை |

**III. சேர்த்து எழுதுக:**

| | | |
|---|---|---|
| 1. நீரை + பிளந்து | - | நீரைப்பிளந்து |
| 2. ஓர் +இடம் | - | ஓரிடம் |
| 3. நாற்றம் + உடைய | - | நாற்றமுடைய |
| 4. கலி + தொகை | - | கலித்தொகை |
| 5. புறம் + நான்கு + நூறு | - | புறநானூறு |

**IV. குறுவினாக்கள்:**

1. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?

உலகம் புடைபெயர்ந்தது போன்ற அழகு பொருந்திய தோற்றத்தை உடையது நாவாய் என அகநானூறு கூறுகிறது.

2. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது?

வீசுகின்ற காற்றானது நாவாயை இரவும் பகலும் ஓரிடத்தும் தங்காமல் அசைத்துச் செல்ல நாவாய் ஓட்டிகளுக்கு துணைபுரிகின்றது.

3. எட்டுத்தொகை நூல்கள் யாவை?

| | |
|---|---|
| * நற்றிணை | * பரிபாடல் |
| * குறுந்தொகை | * கலித்தொகை |
| * ஐங்குறுநூறு | * அகநானூறு |
| * பதிற்றுப்பத்து | * புறநானூறு ஆகியனவாகும் |

### உரைநடை - தமிழரின் கப்பற்களை

**I. பிரித்து எழுதுக:**

| | | |
|---|---|---|
| 1. கடற்பயணம் | - | கடல் + பயணம் |
| 2. பழங்காலம் | - | பழமை + காலம் |
| 3. கட்டுமரம் | - | கட்டு + மரம் |
| 4. திசைகாட்டி | - | திசை + காட்டி |
| 5. கலங்கரை | - | கலம் + கரை |

**II. சேர்த்து எழுதுக:**

| | | |
|---|---|---|
| 1. இனம் + பெருக்கம் | - | இனப்பெருக்கம் |
| 2. வான்வழி + பயணம் | - | வான்வழிப்பயணம் |
| 3. கப்பல் + ஓட்டி | - | கப்பலோட்டி |
| 4. பட்டினம் + பாலை | - | பட்டினப்பாலை |
| 5. மூன்று + நீர் | - | முந்நீர் |

## III. குறுவினாக்கள்:

1. கப்பல் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.

எரா, பருமல், வங்கு, கம்பு. பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பல் உறுப்புகள் ஆகும்.

2. கலங்கரை விளக்கம் என்றால் என்ன?

கடலில் செல்லும் கப்பல்களுக்குத் துறைமுகம் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்காக அமைக்கப்படுவது கலங்கரை விளக்கம் ஆகும்.

3. பாய்மரக் கப்பல்களின் வகைகளை எழுதுக.

பாய்மரக் கப்பல்களின் வகைகள்:

* பெரிய பாய்மரம் * திருக்கைத்திப் பாய்மரம்
* காணப் பாய்மரம் * கோசுப் பாய்மரம் போன்றவை ஆகும்.

4. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காணரத்தைக் கூறுகு.

எடை குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டுத் தோணியாகப் பயன்படுத்தினார்கள். மரத்தின் உட்பகுததி தோண்டப்பட்டவை என்பதால் அவை தோணிகள் என அழைக்கப்பட்டன.

5. கப்பலை செலுத்துபவரின் பெயர்களை எழுதுக.

கப்பலை செலுத்துபவரின் வேறு பெயர்கள்:

* மாலுமி * மீகாமன் * நீகான் * கப்பலோட்டிய போன்றவை ஆகும்.

6. சிறிய நீர்நிலைகளையும், கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.

தமிழர்கள் தோணி, ஒடம் படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றைச் சிறிய நீர்நிலைகளைக் கடக்கத் தமழர்கள் பயன்படுத்தினர்.

கலம், வங்கம். நாவாய் முதலியவை கடல்களைக் கடக்கத் தமிழர்க்ள பயன்படுத்தி ஊர்திகள் ஆகும்.

## இயல் - 5

| | |
|---|---|
| கவிதை பேழை | : 1. இனபத்தமிழ் கல்வி |
| | : 2. ஆழியாச் செல்வம் |
| உரைநடை உலகம் | : வாழ்விக்கும் கல்வி |

## கவிதைப் பேழை - இன்பத்தமிழ்க் கல்வி

### I. பொருள் தருக:

1. வெற்பு - மலை
2. கார்முகில் - மழைமேகம்
3. நிகர் - சமம்
4. கழனி - வயல்
5. பரிதி - கதிரவன்

### II. பிரித்து எழுதுக:

1. வெற்பென்று - வெற்பு + என்று
2. மாலைப்பொழுதினில் - மாலை + பொழுதினில்
3. இரக்கமுண்டாக்கி - இரக்கம் + உண்டாக்கி
4. மேற்றிசையில் - மேற்று + திசையில்
5. இன்பத் தமிழ் - இன்பம் + தமிழ்

### III. சேர்த்து எழுதுக:

1. தாமரை + பூக்கள் - தாமரைப்பூக்கள்
2. ஓவியம் + தீட்டு - ஓவியந்தீட்டு
3. துயின்று + இருந்தார் - துயின்றிருந்தார்
4. என்று + உரைக்கும் - என்றுரைக்கும்

### IV. குறுவினாக்கள்:

1. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?

வானம், ஒடை. நீரோடை, தென்றல், மயில், காடு போன்ற இயற்கைப் பொருள்கள் எல்லாம் அவர் கருத்தைக் கவர்ந்தன.

2. தமிழ்மொழிக் கல்வி, பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்?

* தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் மக்களின் அறியாமை நீங்கும்.
* வாழ்வில் துன்பங்கள் நீங்கி, நெஞ்சில் தூய்மை உண்டாகும்.

3. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?

பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக்காப்பியம் ஆகியனவாகும்.

## கவிதைப் பேழை - அழியாச் செல்வம்

### I. பொருள் தருக:

1. அரசர் - மன்னர்
2. விச்சை - கல்வி
3. வைப்புரி - பொருள் சேமித்து வைக்கும் இடம்
4. செயின் வல்லார் - கவர முடியாது
5. கோட்படா - ஒருவரால் கொள்ளப்படாது

### II. குறுவினாக்கள்:

1. கல்விச் செல்வத்தின் சிறப்புகளாக நாலடியார் கூறுவன யாவை?

* கல்வியைப் பிறருக்கு கொடுத்தாலும் குறையாதது.
* அரசானலும் கவர முடியாது.

2. ஒருவர் தம் குழந்தைக்கு சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் எது?

ஒருவர் தம் குழந்தைக்கு சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்விச் செல்வமே ஆகும்.

## உரைநடை உலகம் - வாழ்விக்கும் கல்வி

### I. பிரித்து எழுதுக:

1. உயர்வடைவோம் - உயர்வு + அடைவோம்
2. கசடற - கசடு + அற
3. பள்ளிக்கூடம் - பள்ளி + கூடம்
4. இவையெல்லாம் - இவை + எல்லாம்

### II. குறுவினாக்கள்:

1. கல்வ அறிவு இல்லாதவர் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

   கல்வ அறிவு இல்லாதவர் 'விலங்கு' என்று கூறுகிறார்.

2. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

   படிக்க வேண்டிய நூல்களை நன்கு ஆராய்ந்து தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும்.

   நூல்களை குற்றமறக் கற்க வேண்டும்.

3. மனிதப் பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு யாது?

   மனிதப் பிறவிக்கு எதிர்காலம் சொல்ல முடியாது.

   பிற உயிரினங்களுக்கு எதிர்காலம் சொல்ல முடியாது.

4. அழியாச் செல்வம் எது?

   ஆழியாத சிறந்த செல்வம் கல்விச் செல்வம் ஆகும்.